# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2017

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 6

சுட்டெண்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

நேரம்: 150 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 5 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. தன்தாயைவிட இனியது இதுவெனக் கவிஞர் காசியானந்தன் கூறுகின்றார்.

அ) வாழ்வு ஆ) வீரம் இ) தமிழ்மொழி ஈ) நட்பு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. உயிர்க்குறில் எழுத்துகள்

அ) 12 ஆ) 7 இ) 5 ஈ) 1

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. வாழைச்சேனை என்னும் இடத்தில் ____________ அமைந்துள்ளது.

அ) கரும்பு ஆலை ஆ) சீமெந்து ஆலை

இ) காகித ஆலை ஈ) மா ஆலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4 முன்னிலை இடத்தைக் குறிக்கும் சொல்

அ) வந்தேன் ஆ) வந்தாய் இ) வந்தான் ஈ) வந்தன

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. **“புறப்படுவோமே மச்சான் புறப்படுவோமே......”** என்ற பாடல்

அ) தாலாட்டுப்பாடல் ஆ) ஏர்ப்பாடல்

இ) ஒப்பாரிப்பாடல் ஈ) தொழிற்பாடல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. தேசிகவிநாயகம்பிள்ளை எழுதிய நூல்களில் ஒன்று

அ) குடும்பவிளக்கு ஆ) மலரும்மாலையும்

இ) இருண்டவீடு ஈ) நீதிநெறிவிளக்கம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. பழமொழி:-

அரசனில்லாத நாடு அச்சில்லாத ______________ .

அ) தேர் ஆ) வண்டி இ) பல்லக்கு ஈ) குடை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. கோடை என்பது

அ) காலப்பெயர் ஆ) இடப்பெயர்

இ) சினைப்பெயர் ஈ) தொழிற்பெயர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. ஒருமை, பன்மை என்பன

அ) திணை ஆ) இடம் இ) பால் ஈ) எண்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. தண்ணீர் என்பதைப் பிரித்தெழுதினால்

அ) தண் + நீர் ஆ) தண்மை + நீர்

இ) தண் + ணீர் ஈ) தண்மை + ணீர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. ஆதரவற்ற குழந்தைகளுக்கு உதவுவதற்காக இல்லங்களை நிறுவிய பெண்மணி

அ) அன்னைபூபதி ஆ) நைற்றிங்கேல்

இ) அன்னைதெரேசா ஈ) மேரிகியூரிஅம்மையார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. மணிபல்லவம் இன்று இப்பெயரால் அழைக்கப்படுகின்றது.

அ) நயினாதீவு ஆ) மண்டைதீவு

இ) கச்சதீவு ஈ) புங்குடுதீவு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. ஆயுதமேந்திய தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடங்கிய ஆண்டு

அ) 1970 ஆ) 1972 இ) 1971 ஈ) 1973

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. இறந்த காலத்தைக் குறிக்கும் சொல்.

அ) கட்டுகிறாள் ஆ) செல்வேன் இ) ஆடுவான் ஈ) மலர்ந்தது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. அகம் என்பதன் எதிர்ச்சொல்

அ) மறம் ஆ) துன்பம் இ) மகிழ்ச்சி ஈ) புறம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. ஊக்கமும் உயர்ந்த உள்ளமும் என்ற பாடத்தில் நாம் __________ ப் போல் வாழக்கூடாது எனக்கூறப்பட்டுள்ளது.

அ) எலியை ஆ) நரியை இ) பன்றியை ஈ) புலியை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. கடல் + அலை என்பதைச் சேர்த்தால்

அ) கடலலை ஆ) கடல்அலை இ) கடல்லலை ஈ) கடற்றலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. இயக்கரது அரசு இருந்த இடம்

அ) வன்னி ஆ) கல்யாணி இ) அநுராதபுரம் ஈ) நாகதீபம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. நாம் எமது ஆசிரியரை மதிப்போம். இச்சொல்லியத்தின் செயப்படுபொருள்

அ) நாம் ஆ) மதிப்போம் இ) எமது ஈ) ஆசிரியரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. யாழ்ப்பாணத் தமிழரசு தமிழக அரசுகளுக்கு அன்பளிப்பாக வழங்கியவை

அ) ஒட்டகங்கள் ஆ) யானைகள்

இ) குதிரைகள் ஈ) மாடுகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. "***மானம் பெரிதென உயிர்விடுவர்***

***மற்றவர்க்காகத் துயர்ப்படுவர்"*** எனக் கூறியவர்

அ) கணியன் பூங்குன்றனார் ஆ) நாமக்கல்கவிஞர்

இ) பாவேந்தர் ஈ) பாரதியார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. **விழுப்பம்** என்பதன் பொருள்

அ) உயர்வு ஆ) சிறப்பு இ) கொடை ஈ) முயற்சி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. கணைக்கால் இரும்பொறை ____________ மன்னன்.

அ) சோழ ஆ) சேர இ) பாண்டிய ஈ) பல்லவ

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. நடந்தான் என்ற வினைச்சொல்

அ) ஆண்பால் ஆ) பலவின்பால் இ) ஒன்றன்பால் ஈ) பலர்பால்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. ஆங்கிலேயர் தமிழ்ச்சிங்கள ஆட்சிப் பகுதிகளை ஒன்றிணைத்த ஆண்டு

அ) 1948 ஆ) 1815 இ) 1505 ஈ) 1833

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. பின்வருவனவற்றுள் இடையின எழுத்து

அ) ஞ் ஆ) ற் இ) ழ் ஈ) ந்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. இலங்கைத் தீவு அமைந்துள்ளது

அ) பசுபிக்மாவாரியில் ஆ) இந்துமாவாரியில்

இ) அட்லாண்டிக்மாவாரியில் ஈ) அத்திலாந்திக் மாவாரியில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. பறம்புமலையை ஆண்ட மன்னன்

அ) காரி ஆ) அதியர்மான் இ) பாரி ஈ) பேகன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. பின்வருவனவற்றுள் பொதுநிலையம் அல்லாதது

அ) வீடு ஆ) பூங்கா இ) பள்ளி ஈ) நூலகம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. எதிர்கால இடைநிலைகள்

அ) கின்று, கிறு ஆ) ப், வ் இ) த், ட் ஈ) ப், ற்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

2) **பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.**

வீட்டுத்தோட்டம் செய்வது ஒரு பயனுள்ள பொழுதுபோக்காகும். வீட்டுத்தோட்டத்தில் பல நன்மைகள் உண்டு. இன்று நாங்கள் அங்காடியில் வாங்கும் காய்கறிகள் வேதியற்பசளைகளைப் போட்டு உற்பத்தி செய்யப்பட்டவை. அக் காய்கறிகள் உடலுக்கு உகந்தவை அல்ல. ஆனால் வீட்டுத்தோட்டத்தில் விளைந்த காய்கறிகள் இயற்கைப் பசளைகளால் உருவாக்கப்படுகின்றன. வீட்டுத்தோட்டக் காய்கறிகள் சுவையும் உடலுக்கு நலமும் தருகின்றன. புத்தம்புதிய காய்கறிகளையும் பெற்றுக்கொள்ள முடியும். அதிக விளைச்சல் கிடைக்கும்பொழுது அக் காய்கறிகளை உறையேந்துகளில் வைத்து நீண்ட நாட்களுக்குப் பயன்படுத்தலாம். வெய்யில் காலத்தில் தோட்டத்தில் வேலைசெய்வது சிறந்த உடற்பயிற்சியாகும். ஐரோப்பாவில் இலைதுளிர் காலத்திற்கும் கோடைகாலத்திற்கும் இடையே உள்ள காலப்பகுதியிலேயே வீட்டுத்தோட்டம் செய்வர்.

1. அதிகவிளைச்சல் கிடைக்கும் பொழுது அக் காய்கறிகளை எதில் வைத்துப் பயன்படுத்தலாம்?

 ____________________

2. எக் காய்கறிகள் உடலுக்கு உகந்தவை அல்ல?

 ____________________

3. சுவையும் உடலுக்கு நலமும் தருபவை எவை?

 ____________________

4. ஐரோப்பாவில் எக்காலங்களில் வீட்டுத்தோட்டம் செய்வர்?

 ____________________

5. எது ஒரு பயனுள்ள பொழுதுபோக்கு?

 ____________________

புள்ளிகள் 10

## 3) பாடநூல் வினாக்கள் ஏழில் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. நுண்ணுயிரிகள் வாழும் இடங்களின் பெயர்கள் இரண்டைத் தருக.

______________________________

______________________________

2. ***பண்டுமுளைப்பது அரிசியே ஆனாலும்.......***
   எனத்தொடங்கும் பாடல் யாரால் பாடப்பட்டது? இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?

______________________________

3. எல்லாளன் ஆட்சியில் நாடு எவ்வாறு திகழ்ந்தது ?

______________________________

______________________________

4. பாரிமகளிரைக் காப்பாற்றிய புலவர் யார் ?

______________________________

5. கி.பி 13 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் சிறப்புடனும் செழிப்புடனும் திகழ்ந்த அரசு எது?

______________________________

6. ***சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்***
   ***பெற்றத்தாற் பெற்ற பயன்***
   இக்குறளின் பொருளை எழுதுக.

______________________________

______________________________

7. கறுப்பு இனத்தின் விடுதலைக்காகப் போராடியவர் யார்?

______________________________

| புள்ளிகள் 10 |
|---|

**4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்துக் கவிதையை ஆக்குவோம்.**

# ஆறு

| | | | | |
|---|---|---|---|---|
| பொங்கிட | ஏறி | மலையும் | வந்தேன் | குளங்கள் |

கல்லும் ________________ குதித்து வந்தேன் - பெருங்

காடும் செடியும் கடந்து வந்தேன்

எல்லை விரிந்த சமவெளி - எங்கும் நான்

இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து ________________

ஏறாத மேடுகள் ________________ வந்தேன் - பல

ஏரி ________________ நிரப்பி வந்தேன்

ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் - மணல்

ஓடைகள் ________________ ஓடிவந்தேன்

புள்ளிகள் 10

## 5) இலக்கண - மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. பின்வருவனவற்றுக்கு எடுத்துக்காட்டுத் தருக.

கூற்றுச் சொல்லியம் : ______________________

வினாச் சொல்லியம் : ______________________

2. அ. மெய்யெழுத்துகள் எத்தனை?

______________________

ஆ. மெல்லின மெய்யெழுத்துகளைத் தருக.

______________________

3. பின்வரும் சொற்களின் பொருளைத் தருக.

வையகம் : ______________________

ஞாயிறு : ______________________

உவகை : ______________________

4. பின்வருவனவற்றுக்கு எடுத்துக்காட்டுத் தருக.

அஃறிணை : ______________

தன்மை : ______________

சினைப்பெயர் : ______________

5. நாம் எமது இனிய தமிழ்மொழியைக் கற்போம்.

இச்சொல்லியத்தின் எழுவாய், செயப்படுபொருள், பயனிலை என்பவற்றைத் தருக.

எழுவாய் : ______________________

செயப்படுபொருள் : ______________________

பயனிலை : ______________________

| புள்ளிகள் 15 |
|---|

6) பந்தியைத் தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.

The Sun gives light to the world. If the sun is not there it will be dark everywhere. The Sun helps livingthings to live in this world. The sun gives us rain too. So we must praise the sun.

Solen giver lys til Jorden. Hvis Solen ikke er her, vil alt være mørkt. Solen giver ernæring til levende organismer. Solen giver os også regn. Derfor tilbeder vi Solen.

Il sole dà luce al mondo. Se non ci fosse il sole ci sarebbe buio ovunque. Il sole permette a tutti gli esseri viventi di vivere nel mondo. Il sole ci dà anche la pioggia. Quindi lodiamo il sole.

De zon geeft licht aan de wereld. Als de zon er niet is zal het overal donker zijn. De zon helpt de levenden te laten leven in deze wereld. De zon geeft ons ook regen. Dus moeten we de zon vereren.

Solen ger ljus till världen. Om inte solen finns, kommer vi ha det mörkt. Solen hjälper till organismerna att leva på jorden. Solen ger även oss regn. Därför måste vi prisa solen.

Sola gir lys til verden. Hvis sola ikke var her ville det vært mørkt over alt. Sola hjelper levende vesener til å leve i denne verden. Sola gir oss regn også. Derfor må vi tilbe sola.

Die Sonne spendet unserer Erde Licht. Wenn es die Sonne nicht gäbr, wäre es auf der Erde überall dunkel. Durch die Hilfe der Sonne können Lebewesen auf dieser Erde leben. Die Sonne gibt uns auch den Regen. Deshalb loben wir die Sonne.

Le soleil éclaire le monde, s'il n'y a pas de soleil alors il fera sombre. Le soleil aide à la survie des espèces vivants et il nous donne la pluie aussi. Pour cela, nous devons remercier le soleil.

புள்ளிகள் 05

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

7) **தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- **பாரிமகளிர்**
- **விலங்குகள்**
- **உமது நண்பனுக்கு ஓர் அஞ்சல்.**

புள்ளிகள் 20